<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்ககிரி</u>

**அசல் வழக்கு எண் 210/2015**

பெயர்: **மகேஸ்வரி** நாள்: 19.09.2023

பி.வா.சா.1 – வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை

பி.வா.சா.1 – மகேஸ்வரி - சத்திய பிரமாணத்தின் பேரில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

<u>குறுக்கு விசாரணை தொடக்க நேரம் 02.40</u>

வாதிகள் என்னுடைய தாயாரின் சொத்தை அபகரிப்பதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். 2ம் பிரதிவாதி என்னுடைய கணவர் ஆவார். எனது தகப்பனார் பெயர் அருணாசலம் ஆகும். தாயார் பெயர் குட்டியம்மாள் ஆகும். எனக்கு ஒரே ஒரு சகோதரி மட்டுந்தான் உள்ளார். எனக்கு 18 ஆண்டுகளுக்கு முன்பாக திருமணம் நடைபெற்றது. எனது சகோதரிக்கு சுமார் 30 வருடங்களுக்கு முன்பாக திருமணம் நடைபெற்றது. என்னுடைய அக்கா தற்போது உயிருடன்தான் உள்ளார். எனது சகோதரி எனது கணவரைதான் மணந்துள்ளார். எனக்கு சொந்தமான பூர்வீக சொத்துக்கள் எனது தகப்பனார் பெயரில் உள்ளது. பூர்வீக சொத்திற்கான சர்வே எண்கள் எனக்கு தெரியாது, அதற்கு பட்டா ஆவணங்கள் உள்ளது. அது அனைத்தும் எனது தகப்பனார் பெயரில்தான் உள்ளது. எனது தகப்பனார் இறந்துவிட்டார். மொத்தம் 13 ஏக்கர் நிலம் உள்ளது.

2) வழக்கு சொத்திற்கான சர்வே எண்கள் 384/5 மற்றும் 6 ஆகும். சர்வே எண் 384/5ல் கோவில் உள்ளது. அது அரசுக்கு சொந்தமான புறம்போக்கு இடமாகும். சர்வே எண் 384/6 என்பது காலியிடமாகும். சர்வே எண் 384/6க்கு கிழக்கு திசையில் தார் சாலை ஒன்று உள்ளது. அந்த தார் சாலையை பயன்படுத்திதான் மக்கள் சர்வே எண் 384/5ல் உள்ள கோவிலை சென்றடைகிறார்கள் என்று சொன்னால், சரியல்ல. எனது தகப்பனாருக்கு 1ம் வாதி பங்காளி என்றால், சரிதான். நான் திருமணம் செய்து சென்றுவிட்டதால், சர்வே எண் 384/5ல் உள்ள கோவிலில் எந்த உரிமையும் கோர முடியாது என்று சொன்னால், சரியல்ல. திருமணம் செய்து கொடுத்துவிட்டதால் குல

வழக்குப்படி தகப்பனாருக்கு சொந்தமான கோவிலில் எந்த உரிமையும் கோரமுடியாது என்றாலும், கணவருக்கு சொந்தமான கோவிலில்தான் உரிமையும் கோர முடியும் என்றாலும், சரியல்ல. வழக்கு சொத்து நான் குடியிருக்கும் இடத்திலிருந்து சுமார் 1 கி.மீ. தூரத்தில் உள்ளது. வழக்கு திருக்கோவில் சுமார் 100 ஆண்டுகள் பழமையானது என்றால், சரிதான். அந்த கோவிலுக்கு 25 குடும்பங்கள் சேர்ந்து வழிபட்டு வருகின்றனர். திருவிழா காலங்களில் சர்வே எண் 384/6 ல் உள்ள காலியிடத்தைதான் பொங்கல் வைத்து வழிபடுவதற்காக காலம் காலமாக பயன்படுத்தி வருகிறார்கள் என்று சொன்னால், சரியல்ல. அவ்வாறு வழிபாடு செய்யும்போது நாங்கள் தடுத்தோம் என்றால், சரியல்ல. நீதிமன்ற ஆணையர் வழக்கு சொத்தை பார்வையிட்டார். நீதிமன்ற ஆணையர் பார்வையிடும்போது நான் இல்லை. என்னுடைய கணவரும் ஆணையருடன் செல்லவில்லை. வழக்கு சொத்தை பார்வையிடும்போது நீதிமன்ற ஆணையருடன் எனது கணவர் இருந்தார் என்றாலும், அதை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால், சரியல்ல.

3) நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்த அறிக்கை மற்றும் வரைபடத்தை எனது வழக்கறிஞர் மூலமாக பார்வையிட்டு தெரிந்து கொண்டேனா என்றால், தெரிந்து கொண்டேன். சர்வே எண் 384/6 க்கு குட்டியம்மாள் பெயரில் பட்டா உள்ளதா என்றால், பட்டா வாங்க முயற்சி செய்தோம், ஆனால் கொடுக்கவில்லை. நானும் எனது வீட்டுக்காரர்தான் பட்டா வாங்க முயற்சி செய்தோம். எனது தாயார் வயதாகி விட்டதால் பட்டா வாங்க முயற்சி செய்யவில்லை. 100 வருடங்களுக்கு முன்பாக சர்வே எண் 384/6 ல் உள்ள நிலத்தை கோவிலுக்காக கொடுத்துவிட்டார்கள் என்றாலும், அதை மறைத்து நாங்கள் பட்டா வாங்க முயற்சி செய்தோம் என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால், சரியல்ல. சர்வே எண் 384/5 வருவாய் ஆவணங்களின்படி அரசு புறம்போக்கு என்று வகைபாடு செய்யப்பட்டுள்ளது என்றால், சரிதான். அ பதிவேட்டில் கோவில் என்று குறிப்பிடப்பட்டுள்ளதா என்ற விபரம் எனக்கு தெரியாது.

4) வருவாய் ஆவணங்களின்படி சர்வே எண் 384/6 ல் உள்ள நிலமானது காலி நிலம் என்று வகைபாடு செய்யப்பட்டுள்ளது என்ற விபரம் தெரிந்த கொண்டேனா

என்றால், காலி நிலம் என்று இல்லை, குட்டியம்மாள் நிலம் என்று உள்ளது. அ பதிவேட்டில்தான் குட்டியம்மாள் நிலம் என்று உள்ளது என்றாலும், வருவாய் ஆவணங்களின்படி காலி இடம் என்று உள்ளது என்றாலும் சரியல்ல. சர்வே எண் 384/6 ல் குட்டியம்மாள் பெயர் தவறுதலாக சேர்க்கப்பட்ட காரணத்தினால்தான் அவர் பட்டா மாற்றம் செய்ய எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று சொன்னால், சரியல்ல. எனது தாயார் குட்டியம்மாள் 08.10.2021 ல் இறந்துவிட்டார். எனது கணவர் வழக்கறிஞர் தொழில் செய்து வந்தார் என்றால், சரிதான். எனது கணவருக்கு வழக்கு சம்பந்தமான விபரங்கள் நன்கு தெரியும்.

வாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க பி.வா.சா.1 ன் குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.

குறுக்கு விசாரணை முடிந்த நேரம் 03.08

ஒப்பம் /மகேஸ்வரி

ஒப்பம்/திரு.ஆர்.ராதாகிருஷ்ணன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்ககிரி.